# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 34 Apirl - 2019 Issue - 4

ஆசிரியர் உரை

## சிலுவை பவுலின் மேன்மை

மேன்மை என்பது ஒரு மேன்மைதங்கிய வார்த்தை. ஒருவர் நிகழ்த்தியிருக்கும் சாதனை பற்றியோ அல்லது கொண்டிருக்கும் திராணி பற்றியோ அல்லது பெற்றிருக்கும் ஓர் உயர்வு பற்றியோ அல்லது அடைந்திருக்கும் ஒரு சிறப்பு நிலை பற்றியோ அல்லது ஏற்றிருக்கும் ஒரு நம்பிக்கை பற்றியோ உண்டாகும் மிஞ்சுதலான பெருமையுணர்வு தான் மேன்மை. இது படிப்பு, பதவி, பட்டம், பணம், அழகு, மொழி, இனம், தேசம் இன்னும் பக்திச் செயல்பாடு என்று எதைச் சார்ந்ததாகவும் இருக்க முடியும். பொதுவாக இப்படிப்பட்ட பெருமையுணர்வைப் பெற்றிருப்பவர்கள் தங்களுக்கு மேன்மையாக இருப்பது பற்றி சிலாகித்துப் பேசுவார்கள் அல்லது பேசிக்கொண்டே இருப்பார்கள்.

இப்பொருளினடிப்படையில் தான் பவுலடியார் தனக்குப் பெருமையுணர்வை ஏற்படுத்தும் மேன்மை எது என்று விளம்பியிருக்கிறார். **நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்** என்று (கலா.6:14). இதே பவுலடியார், கொரிந்தியருக்கு எழுதும்போது, **நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும்**

**இருக்கிறார்** என்று கூறுகிறார் [Iகொரி.1:23]. இவ்வசனங்கள் கிறிஸ்துவின் சிலுவை பவுலுக்குப் பேச்சாக மாத்திரமல்லாமல் மூச்சாகவும் இருந்துள்ளதென்று காட்டுகிறது.

சிலுவை என்பது நெடுக்கும், குறுக்குமான மரக் கட்டைகளால் அல்லது மரச் சட்டங்களால் உண்டாக்கப்படும் ஒன்று. இயேசு ஆண்டவர் தற்காலிகமாக இப்பூமியில் வாழ்ந்த போது ஆட்சிக் கட்டிலில் இருந்த ரோமானியர்களால் கூட்டல் குறி போன்ற சிலுவை கடுங்குற்றவாளிகளின் தண்டனைக்காகவும், அப்படி விதிக்கப்படும் தண்டனையின் நிறைவேற்றத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டது. ஒருவேளை இவ்வகை மரணத்தை ரோமர்கள் தீவிரமாக நடைமுறைப்படுத்தியிருந்தாலும், இதை ஆரம்பித்தவர்கள் பெனிக்கேயர்கள். ஆம், அவர்களின் காலத்தில் [**T**] என்ற ஆங்கில எழுத்துப் போன்று சிலுவை வடிவம் பெற்றிருந்தது. பின்னாளில், பெருக்கல் குறி [**X**] போன்று உருமாறி, ரோமர்கள் காலத்தில் கூட்டல் குறிபோல் [**+**] ஆக்கப்பட்டது. தரம் தாழ்ந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்குத் தான் இத்தண்டனை கொடுக்கப்பட்டது. பெரும்பாலும், அந்நாட்களில் இழி பிறவிகளாகக் கருதப்பட்ட அடிமைகள் தான் இவ்வகை தண்டனை பெற்றார்கள்.விதிவிலக்காக ஒரு சில ரோமக் குடிமக்களுக்கும் கிடைத்துள்ளது.

இத்தண்டனை பெற்ற குற்றவாளிகள் சிலுவை மரத்துக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பாகக் கொடுமையான முறையில் சவுக்கால் அடிக்கப்படுவார்கள். இச்சவுக்கடியின் நோக்கம் குற்றவாளி சிலுவையில் சீக்கிரம் மரிக்கும்படியாக அவன் சரீரத்தைப் பெலவீனப்படுத்துவது. இப்படி பெலவீனப்படுத்தப்பட்ட சரீரத்தில் சிலுவை மரத்தைக் குற்றவாளி தூக்கிக் கொண்டு, பட்டணத்துக்குப் புறம்பே இருக்கும் தண்டனை நிறைவேற்றத்துக்கான இடத்திற்குச் செல்ல வேண்டும். ஒரு குற்றவாளி இப்படிச் சிலுவையைச் சுமந்து கொண்டு தட்டுத் தடுமாறி, விழுந்து எழுந்து நடந்து செல்லும்போது, இவன் செய்த குற்றம் என்ன என்று ஊரும், உலகமும் அறிந்து கொள்ளும்படியாக, **இவன் செய்த குற்றம் இது தான்** என்று எழுதப்பட்ட பதாகையை ஒருவன் ஏந்திப் பிடித்துக்கொண்டு ஒய்யாரமாக அவனுக்கு முன்பாக நடந்து செல்வான்.

பிறகு, குறிப்பிட்ட இடம் வந்தவுடன், சிலுவை கீழே கிடத்தப்பட்டு, குற்றவாளி அதன் மீது ஆடைகள் களையப்பட்ட நிலையில் மல்லாக்காகப் படுக்க வைக்கப்பட்டு, கை கால்கள்

சிலுவை மரத்தோடு கட்டப்பட்ட நிலையிலோ அல்லது ஆணிகள் கடாவப்பட்ட நிலையிலோ, குற்றவாளி கதறக் கதற அப்படியே அலாக்காகத் தூக்கி நிறுத்தப்பட்டு, ஒட்டுமொத்த சரீரமும் மூன்று புள்ளிகளில் தொங்கும்படியான நிலையில் விடப்பட்டு, வேதனை தாங்கமுடியாமல் துடிப்பது வேடிக்கை பார்க்கப்படும். பிறகு, உயிர் போனதை உறுதி செய்யும்படி கால் எலும்புகள் முறிக்கப்படும். இன்னும் சில சந்தர்ப்பங்களில் விலாவில் குத்தப்படும். இயேசு ஆண்டவருக்கு கால் எலும்புகள் முறிக்கப் படாமல் விலாவிலே தான் குத்தப்பட்டது (யோவான் 19;32-35).

இப்படி சாபத்தின் சின்னமாகக் கருதப்பட்ட மரத்தையும், (உபா.21:22,23; கலா.3:13) அவமானத்தின் அடையாளமாகப் பார்க்கப்பட்ட மரத்திலான சிலுவையையும் இயேசு வெற்றியின் சின்னமாக மாற்றினார் (கொலோ.2:13,15). ஆம், அப்பாரச் சிலுவையில் சிந்தின இரத்தம் தான், **சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்** வல்லமை கொண்டதாக இருக்கிறது (Iபேதுரு 1:18,19;Iயோவான் 1:7).

இந்தச் சிலுவையின் நற்செய்தியைப் பவுலடியார் கலாத்தியருக்கு எடுத்து விளக்கினபோது, பழைய ஏற்பாட்டின் படியான கிரியைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தங்கள் பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த கலாத்தியர்கள், விசுவாச நிலைக்குத் தங்களை உட்படுத்தி, பக்தி ரீதியாகப் புதிய பார்வை பெற்று, பரத்தை நோக்கிப் பழுதில்லாமல் பயணிக்கத் தொடங்கினர். சும்மா இருப்பானா சாத்தான்? யூத மதப் போதகர்களை உசுப்பி விட்டு, அவர்கள் வழியாகப் பவுலடியாரின் அப்போஸ்தல அதிகாரம் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பி (காலா. 1:11; 2:14), விருத்தசேதன உடன்படிக்கையை எக்காரணம் கொண்டும் மீறக்கூடாது என்று எடுத்துரைக்கவும், எச்சரிக்கவும் செய்தான் (5:2,11;6:12). இதன் மூலம், கலாத்தியா நாட்டு சபையாருக்கு மத்தியில் மோசே பிரமாணத்தின் கை ஓங்கி, கிறிஸ்துவின் பிரமாணம் தாழ்ந்து காணப்பட்டது. இச்செய்தி கேட்டுப் பதறிப்போன **சிலுவைப் பித்தனாகிய பவுல்**,மனபாரத்தோடும், வேதனையோடும் இந்நிருபத்தை வடித்திருக்கிறார். விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதலும், கிறிஸ்துவின் சிலுவை சொல்லும் சுவிசேஷத்தினாலே சுயாதீனமடைவதுமே மேன்மையானது. ஆகவே, அடிமைப்படுத்தும் பிரமாணம் ஆகாது, ஒதுக்கித் தள்ளித் தூக்கி எறியுங்கள் என்று வலியுறுத்துகிறார்.

இப்படிப்பட்ட நூலின் இறுதியில் தான், **மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ,**

**அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளக் கட்டாயம் பண்ணுகிறார்கள். விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்பு கிறார்கள். நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்** என்கிறார் (கலா.6:12–14).

சரி, பவுலடியார் சிலுவையை மேன்மையாகக் கருதியதற்கு அவர் மனதில் ஏராளமான காரணங்கள் இருந்திருக்கலாம். அவைகளை நம்மால் பட்டியலிட முடியாது. ஆயினும் அவைகளில் ஒரு மூன்றை நாம் தெரிந்து கொண்டு, அவைகள் உலகத்துக்கும், நமக்கும் உரக்கச் சொல்லும் பாடங்கள் என்னவென்று கவனிப்போம்.

### I. சிலுவை என் வாழ்க்கை அர்த்தமற்ற ஒன்று என்று சொல்லுவதில்லை

சிலுவைப் பித்தனாகிய பவுலடியாருக்குச் சிலுவை மேன்மையாக இருந்ததிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், இப்பூமியில் மனிதனின் வாழ்க்கை அர்த்தமுள்ள ஒன்று என்பது.

ஆதியிலே தேவன் மனிதனைப் படைத்தபோது, அவனைத் தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியும் படைத்தார் (ஆதி.1:26,27). அப்படிப் படைத்தவர், ஓர் ஆணோடும், ஒரு பெண்ணோடும் மாத்திரம் நிறுத்திக் கொண்டு, இயற்கைச் சட்டத்தின்படி அவர்கள் பலுகிப் பெருக அனுமதித்ததற்கான காரணத்தை மல்கியா தீர்க்கன் இவ்விதம் கூறுகிறார். **அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரி பூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே** என்று (மல்.2:15). ஆம், தம்முடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதன் எப்பொழுதும் தேவ பக்தியுள்ளவனாக இருக்க வேண்டுமென்பதே அவர் விருப்பம். ஆனால், செம்மையாகப் படைக்கப்பட்ட மனிதனோ பலவிதமான உபாயத் தந்திரங்களைத் தேடிக்கொண்டான் (பிர.7:29) விளைவு? தேவனிடமிருந்து பிரிந்துபோனான் ( ஏசாயா 59:1,2).

மனிதன் தன்னுடைய பாவச்செயல் காரணமாகத் தேவனிடமிருந்து பிரிந்துபோயிருந்தாலும், தேவனுடைய பார்வையிலிருந்து அவன் விலகிவிட முடியவில்லை. தேவன் அவன் மீது சிந்தை கொண்டவராகவே இருந்தார். ஏனெனில், அவன் நித்தியத் தன்மையோடு படைக்கப்பட்டிருந்தான். அப்படிப்பட்ட மனிதன் நித்திய காலத்திற்கும் ஆக்கினையை அடைவது அவருடைய விருப்பமல்ல. **தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களை மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிற தேவன்** (யூதா.6), மனிதன் காரியத்தில் மென்மை காட்டி, அவனைத் தம்மிடமாகச் சேர்க்கும்படியான ஒரு மீட்பின் திட்டத்தை உண்டு பண்ணினார். அது எப்படி என்று ஆச்சரியப்பட்டு தேவ தூதரும்அம்மீட்பின் திட்டத்தை உற்றுப் பார்க்க ஆசையாயிருந்தார்கள் (I பேதுரு1:12).

அப்படிப்பட்ட மீட்பின் திட்டத்தைத் தமது ஒரே பேறான குமாரனைக் கொண்டு செய்து முடித்தார். யோவான்3:16–ல் நாம் அதை வாசிக்க முடியும். **தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** என்று. அந்தத் தேவக் குமாரன் தன்னைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்து இரட்சிப்பை மனுக்குலத்துக்குச் சாத்தியமாக்கினார் (எபேசியர்5:2)

அன்பானவர்களே! இவைகளெல்லாம் நமக்கு என்ன சொல்லுகிறது? ஆம், இப்பூமியில் மானிடம் காணும் பிறவி அர்த்த மற்ற ஒன்றல்ல. வெந்ததைத் தின்று விதி வந்தால் செத்துமடியும் ஒரு வாழ்வல்ல. மனிதன் மரித்து மண்ணுக்குள் போனாலும் அவன் விண்ணுக்கானவன். விண் வாழ்க்கை ஒருவனுக்குச் சொந்தமாக வேண்டுமானால், பவுலடியார் போன்று கிறிஸ்துவின் சிலுவையை மேன்மையாக எண்ணவேண்டும். அப்படி மேன்மையாகக் கருதுவதற்கு, சிலுவையைப் பற்றிய அறிவும், கிறிஸ்துவின் சிலுவை தரும் செய்தி பற்றிய புரிதலும் அவசியம்.

இந்த உண்மையைப் பவுலடியார் புரிந்துகொண்டபடியால் தான், **கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்** என்று சொல்ல முடிந்தது (பிலி.1:21). ஆக, ஆன்மீக நிலையில் நாம் கேட்பாரற்றவர்களல்ல என்பதையும், தேவன் நம்மேல் கண்ணோக்கமாயிருக்கிறார் என்பதையும் புரிந்து கொண்டு, பவுலடியார் போல், சிலுவையை மேன்மையாகக் கருதி, மறுமையின் வாழ்வுக்கு நம்மை ஆயத்தமாக்கிடுவோம்.

## II.சிலுவை என்தோல்விகளுக்கு விமோசனம் இல்லையென்று சொல்லுவதில்லை

சிலுவைப் பித்தனாகிய பவுலடியாருக்குச் சிலுவை மேன்மை யாக இருந்ததிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இரண்டாம் பாடம், மனிதனின் பாவவாழ்வுக்கு விமோசனம் உண்டு என்பது.

மனிதனைப் பாடாய்ப்படுத்தும் பிரச்சினைகளில் தலையாயது பாவ தோல்விதான். மனிதனின் வேறெந்த தோல்வியும், அது எவ்வளவு அளவிட முடியாததாக இருந்தாலும் இம்மண்ணோடு முடிந்து போகும். மண்ணையும், விண்ணையும் ஒரு சேரச் சேதப் படுத்தும் அதிகாரம் பாவத்தைத் தவிர வேறெதற்கும் இல்லை. ஆகவே, தான் **பாவத்தின் சம்பளம் மரணம்** என்று பார்க்கிறோம் (ரோமர்6:23). ஒருவேளை, நிலைமை இப்படியிருந்தாலும் மனிதன் நம்பிக்கையிழந்து விடவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இயேசு ஆண்டவர் இப்பூமிக்கு அனுப்பப்பட்டதின் நோக்கத்தை லூக்கா ஆசிரியர் இங்ஙனம் கூறுகிறார். **இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்** என்று (லூக்கா19:10). இதே உண்மையை யோவான் ஆசிரியர் **இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** என்று வெளிப்படுத்தினார் (யோவான் 1:29).

ஆக, இங்கே நாம், ஒவ்வொருவரும் இன்னும் உலகத்தின் மானிடர் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படைச் செய்தி, மனிதனுடைய பாவங்களுக்கு, அவனுடைய ஆன்மீகத் தோல்விகளுக்கு விமோசனமும், மன்னிப்பும், இரட்சிப்பும் உண்டு என்பது. கடவுள் மறுப்பாளர்களைத் தவிர்த்து, ஏனைய எல்லோருமே தத்தம் ஆன்மீக வாழ்வில் ஒரு தேடலை உடையவர் களாகவே உள்ளார்கள். ஆகவே தான், அவரவர்களுக்குத் தெரிந்த வழிகளிலும், அவர்கள் நம்பும்படி அவர்களுக்குப் போதிக்கப்பட்ட நெறிகளிலும் நாட்டம் கொண்டு செயல்படுகிறார்கள். ஆயினும், பாவ விமோசனத்திற்குப் பலவழிகள் கிடையாது. உலகமும், உலகத்தின் இறைப் பற்றாளர்களும் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதற்கான ஒரே வழி இயேசு மாத்திரமே. இயேசு ஆண்டவர் தாமே இவ்வுண்மையை, **நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்** (யோவான் 3:16) என்று கூறி பகிரங்கப்படுத்தியுள்ளார். இதே கருத்தை பவுலடியார் எபேசியருக்கு இங்ஙனம் கூறுகிறார். **அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது** என்று(எபே.1:7). இவ்வளவு வல்லமை பெற்றிருக்கும் இயேசுவின் இரத்தம் அவருடைய சிலுவையில் தான் சிந்தப் பட்டது. ஆகவே தான், சிலுவை என் மேன்மை என்று பவுல் மார்தட்டுகிறார். புரிகிறதா?

அன்பானவர்களே! இயேசுவின் இரத்தத்திற்கு உலகில் வேறெதற்கும் இல்லாத வல்லமை இருக்கும் போது, நம்மில் எத்தனைப் பேர் அந்த இரத்தத்தின் வல்லமையை உணர்ந்து, அதற்காகச் செய்ய வேண்டியதைச் செய்து, பாவமன்னிப்பைப் பெற்று இரட்சிப்படைந்திருக்கிறோம்? என்னுடைய பாவம் அல்லது பாவங்கள் இயேசு சிந்தின இரத்தத்தின் வல்லமையின் கீழ் வராது என்று எந்தப் பாவமும் இல்லை. இப்பேருண்மையைப் புரிந்து கொண்டு, இயேசுவின் இரத்தத்தால் நம் பாவங்கள் கழுவப் படும்படியாய் நற்செய்தியின் உபதேசங்களுக்கு நம்மைக் கீழ்ப் படுத்தி, பரலோக பாக்கியத்திற்கு நம்மைத் தகுதிப்படுத்துவோம்.

## III **சிலுவை என் மரணம் ஒரு முடிவு என்று சொல்லுவதில்லை**

சிலுவைப் பித்தனாகிய பவுலடியாருக்குச் சிலுவை மேன்மை யாக இருந்ததிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், மரணம் ஒரு முடிவு அல்ல என்பது.

மரணத்தைப் பற்றிய பார்வை மனிதனுக்குப் பலவிதமாக உள்ளது. அப்படிப்பட்ட பார்வைக்கான காரணம் அவனவன் கொண்டிருக்கும் இறைக் கோட்பாடே.

ஆனால், கிறிஸ்தவம் மறுபிறப்பு பற்றி பேசும் மார்க்கம். மரணம் என்பது ஆவியும், சரீரமும் பிரிக்கப்படும் ஒரு நிலை. மரணத்தின் மூலம் இந்தப் பிரிவு ஏற்படுகிறபோது மண்ணான மனித சரீரம் தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது [பிரசங்கி 12:7]. ஆக, இருக்கிறவன் இல்லாமற்போவதென்பது மரணமல்ல. மனிதன் மரித்தாலும் அவன் ஒருநாளில் உயிர்ப்பிக்கப்படுவான். இது குறித்துப் பவுலடியார் கூறும்போது, **ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்** என்கிறார் [1கொரி.15:22].

தெசலோனிக்கே சபையார் பக்தி வாழ்வில் மேம்பட்டவர்களாக இருந்தும் மரணம் பற்றியும், மரித்தோர் பற்றியும், சரியான பார்வை இல்லாமல் மரித்தவர்களுக்கு **கிறிஸ்துவின் வருகையில்** பங்கில்லை என்று எண்ணித் துக்கப்பட்டபோது, பவுலடியார் அவர்கள் ஆவிக்குரிய அறிவீனத்தைக் கடிந்து கொண்டதோடு, மரித்தோர் பற்றிய ஓர் உண்மையையும் இங்ஙனம் உறுதிப்படுத்தினார். **இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார்** என்று [1தெச.4:14]. ஆக,

மரணத்திற்குப் பின் உயிர்த்தெழுதல் உண்டு. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குள் மரியாதவர்களும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். ஏனெனில், எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு [எபி.9:27]. **ஏனெனில், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்** [IIகொரி.5:10].

சரி, அருமையானவர்களே! இங்கே நிச்சயமாகத் தெரிகிற ஒரு செய்தி என்ன? மரணத்திற்குப் பின்பு ஒரு வாழ்க்கை உண்டு. கிறிஸ்து சிலுவையில் மரித்ததோடு அவரது வாழ்க்கை முடியாமல், அவர் உயிரோடே எழுந்ததாலும், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அவரோடு கூட எழுப்பப்படுவார்கள் என்பதாலும், இன்னும், பிறந்த எல்லோரும் நியாயத்தீர்ப்புக்காக எழுப்பப்படுவார்கள் என்பதாலும் மறுமையின் வாழ்க்கை உறுதியாகிறது. அந்த வாழ்க்கை **நித்திய ஜீவனைக்** கொண்டதாகவோ, **நித்திய ஆக்கினை**க்கானதாகவோ இருக்கும் [மத்தேயு 25:46] நியாயத்தீர்ப்பிலே நித்திய ஜீவனுக்கானவர்களைப் பார்த்து, **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்** என்பார் [மத்தேயு 25:34]. நித்திய ஆக்கனைக்கானவர்களைப் பார்த்தோ, **சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்கவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்** [மத்தேயு 25:41] என்பார்.

சிலுவையின் நாயகர் இப்படி இன்னுமொரு வாழ்வை உறுதி செய்திருக்கிறபடியால், நாம் **ஆசீர்வதிக்கப்பட்டவர்களே** என்று அழைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நம்மைத் தயார் செய்கிறோமா அல்லது **சபிக்கப்பட்டவர்களே** என்று கடிந்து கொள்ளப்பட்டு விரட்டப்படுவதற்கு ஏதுவானவர்களாகப் போகிறோமா! தீர்மானிக்க வேண்டிய நேரமிது. பவுலடியார், **ஆசீர்வதிக்கப்பட்டனே** என்பதற்குத் தன்னை முற்றிலுமாகத் தகுதிப்படுத்தி, **நீதியின் கிரீடத்தையும்** [II தீமோ.4:8] உறுதி செய்த படியால் தான், சிலுவை என் மேன்மை என்று ஊர் ஊராக சென்று கூவிக்கூவிக் கூற முடிந்தது.

அப்படியானால் நாம் எப்படி? நமக்குச் சிலுவை மேன்மையாக இருக்கப் போகிறதா? அல்லது யூத மத போதகர்கள் போல மாம்சப்பெருமை மேன்மையாக இருக்கப் போகிறதா? சிந்தித்துச் செயல்படுவோம். தேவச் சித்தத்தை நிறைவேற்றுவோம். ஆமென்! ✶

# நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை

Bro. J.C. சோட்

இயேசு எருசலேமுக்குப் போகும்போது, வழியிலே பன்னிரண்டு சீஷரையும் தனியே அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும், புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும், மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார். அப்பொழுது, செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடு கூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்து கொண்டு: உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றாள். அவர் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்: உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரரனாகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என்றாள். இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கு தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமோ என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பரிசத்திலும், என் இடது பரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதைக் அருளுவது என் காரியமல்ல என்றார். மற்றப் பத்து பேரும் அதைக் கேட்டு, அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள். அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச் செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால், அவன் உங்களுக்குக் பணிவிடைக்காரனா யிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க

விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். அவர்கள் எரிகோவிலிருந்து புறப்பட்டுப்போகையில், திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள் [ மத்தேயு 20:17–29].

மாற்கு 10:35 ம் வசனத்தின் படி, செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபு, யோவான் என்பவர்களும், அவர்களுடைய ராஜ்யம் அல்லது சபை நிறுவப்பட்டவுடன், அவர்களை இயேசுவின் வலது, இடது பக்கங்களில் உட்கார வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை என்பதை அறிந்த இயேசு உடனே பதிலளித்தார். இயேசு, சிலுவைப் பாடுகளுக்குள்ளாக முழுகி மரணமடையப் போகிறார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இவற்றை உங்களால் தாங்கிக்கொள்ள கூடுமோ என்று கர்த்தர் கேட்டுவிட்டு, பின்னர் பதிலளித்தார்: நீங்கள் அவ்வாறு தாங்கக் கூடுமாயின் கூட, உங்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றுவது என்னுடைய அதிகாரத்தின் படியானதல்ல என்று கூறினார். என்றாலும், இன்றைய நாட்களிலும் பல மக்கள் கர்த்தர் ஒரு போதும் வாக்களித்திராத காரியங்களை அவரிடம் வேண்டும் போது தாங்கள் எதைக் கேட்கிறார்கள் என்பதை அறியாதிருக்கின்றனர் என்ற கருத்தை இங்கு குறிப்பிட நான் விரும்புகிறேன். முக்கியமாக, பரிசுத்த ஆவியானவர் சம்பந்தப்பட்ட காரியங்களைப் பற்றி நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

உதாரணமாக, பலர் பரிசுத்த ஆவிக்காக வேண்டுகின்றனர். அவர்களைப் பார்த்து, கர்த்தர் கூறுவார்: நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை என்று மேலும், பொதுவான விசுவாசிகளுக்கு இந்தத் திரு முழுக்கு ஒரு போதும் வாக்களிக்கப்படவில்லை. ஆதியில் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே தோற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவர் வாக்களிக்கப்பட்டிருந்தார் [யோவான் 14:26; லூக்கா. 24:29; அப்.1:8]. யூதர்களைப் போலவே, புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் என அப்போஸ்தலர்கள் திருப்தியடையும்படியாக கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் கூட பரிசத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர். அப்போஸ்தலருடைய நடபடிகள் 10,11 அதிகாரங்களில் இது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நாட்களிலேயும் ஜனங்கள் அக்கினியால் திருமுழுக்கு நடத்தப்படுகிறது எனநினைக்கின்றனர், இதுவும் தவறே. அக்கினித் திருமுழுக்கு என்பது எதிர்காலத்தில் நடை பெற வேண்டிய ஒரு காரியம். அந்த சமயத்திலே கெட்டவர்களைக் கர்த்தர் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளி தண்டிப்பார். இதுவே அக்கினி திருமுழுக்கு என்பதாகும். அது என்னவென்று அறிந்திருந்தால், இந்த திருமுழுக்கு தங்களுக்கு வேண்டுமென யாரும் நிச்சயமாக கேட்கமாட்டார்கள். தயவு செய்து வெளிப்படுத்தின விசேஷம் 21:8ம் வசனத்தைப் படியுங்கள்.

அற்புதங்களைச் செய்ய வேண்டுமென பெந்கொஸ்தே கூட்டத்தார் கர்த்தரிடம் கேட்கின்றனர். அவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் வல்லமை இருப்பதாகவும், எனவே, அவர்கள் மூலமாக வியாதிக்காரர்களைச் சுகப்படுத்தவும், இன்னும் பிற அற்புதங்களைச் செய்யவும் கர்த்தர் கிரியை செய்வதாக அவர்கள் கூறுகின்றனர். இல்லை, இவர்களிடம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை கிடையாது. இன்னும் அற்புதமாக வியாதிக்காரர்களைக் சுகப்படுத்தவோ, மரித்தோரை உயிரோடு எழுப்பவோ அல்லது வேறு எதையாவது அற்புதமாகச் செய்யவேண்டுமென்றோ ஏறெடுக்கும் இவர்களுடைய ஜெபங்களுக்கு கர்த்தர் பதில் அளிப்பதும் இல்லை. அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் மீதெல்லாம் கைகளை வைத்தார்களோ அவர்கள் மட்டுமே அற்புதங்களைச் செய்யக்கூடியவர்களாக இருந்தனர் என நாம் வசனத்தில் படிக்கிறோம் (அப். 2:43;8:6,7). இன்று, ஒரு அப்போஸ்தலரும் அல்லது அவர்கள் கைகளை வைத்தவர்களும் இல்லாத காரணத்தால், அற்புதங்கள் செய்யக்கூடிய வல்லமை படைத்தவர்கள் எவரும் இன்று இல்லை. அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் பேரில் கைகளை வைத்தார்களோ அந்த சீடர்களும் அற்புதங்களைச் செய்தபோது, அற்புதங்கள் உண்மையாகவே நடைபெறுகின்றதென்று யாவரும் அறிந்தனர். ஏனெனில், அவர்கள் மரித்தோரை எழுப்பினார்கள். பிசாசுகளைத் துரத்தினார்கள், இன்னும், கொஞ்சங்கூட சந்தேகத்திற்கு இட மில்லாதபடி அற்புதங்கள் தான் என ஏற்றுக்கொள்ளப்பட்ட அநேக காரியங்களைச் செய்தனர். ஆனால், இன்றைக்கு வெறுமனே, நாங்களும் செய்கிறோம் என்று பொய் சொல்வது மட்டுமே நடக்கிறது. உண்மையை நிரூபிக்கும் செயல்கள் எதுவும் நடப்ப தில்லை. ஒருவேளை இன்று அற்புதங்களைச் செய்கிறவர்கள் இருப்பின், தேவனுடைய வல்லமையால் அவர்கள் அவற்றைச் செய்வதில்லை.

பிரிவினை சபை போதகர்கள் இன்று பிசாசசைத் துரத்த வேண்டுமென்று கர்த்தரிடம் கேட்கின்றனர். ஆனால், கிறிஸ்து கூறியது போல, **சாத்தான் சாத்தானை துரத்துமா?** இன்று அற்புதங்களைச் செய்யவும், பிசாசுகளைத் துரத்தவும் வேண்டி, பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை கர்த்தர் யாருக்காவது கொடுப்பதாக இருந்தால், அவருக்குக் கீழ்ப்படியக்கூடிய, வசனத்தின் படியாக அவருடைய பெயரைத் தாங்கின அவருடைய சபையில் அங்கம் வகிக்கக்கூடியவர்களுக்கு அந்த வல்லமையை நிச்சயமாக அளித்திருப்பார். ஆனால் சந்தேகமின்றி, அவருடைய சபையில் உள்ளவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இப்படிப்பட்ட மக்கள் தாங்கள் கேட்பது இன்னது என்று அறியாமல் கேட்கிறார்கள்.

இதே மக்களில் பலர், அவர்களையும் அவர்களுடைய போதனைகளைக் கேட்பவர்களையும், இரட்சிக்க வேண்டுமென்று ஜெபத்தின் மூலம் கர்த்தரிடம் கேட்கின்றனர். ஜெபத்தின் விளைவாகப் பாவத்திலிருந்து இரட்சிப்பு கிடைக்கும் என்று வேத வாக்கியங்களில் எங்குமே கர்த்தர் கூறவில்லை. ஒரு தடவை ஒருவன் கிறிஸ்தவனாகி, பின் அவன் பாவஞ்செய்தால், அவன் மனந்திருந்தி, பிறகு பாவமன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டு மென்றும் **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் [மாற்கு 16:15, 16] என்றும் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தங்களுக்கு இருப்பதாக கூறிக்கொள்ளும் மக்கள், எழுதப்பட்ட வசனத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் கூட அறியாதவர்களாக இருப்பது விநோதமாக இல்லையா? இவர்களிடம் கர்த்தர் தனிப்பட்ட முறையில் இன்று ஏதோ செய்தி சொல்ல இருப்பதாகத் தாங்களே கற்பனை செய்துகொண்டு, கர்த்தர் தங்களிடம் பேச வேண்டுமென்று கூட ஜெபம் செய்து கொண்டிருக்கின்றனர். எனது நண்பர்களே! ஏமாந்து போகாதீர்கள். நாம் தேவனிடம் கேட்க நமக்கு உரிமை உண்டு. ஆனால், அறியாமையினால் அவ்விதம் செய்து, அவர் வாக்களிக்காத வைகளை நாம் அவரிடம் கேட்கக்கூடாது. மாறாக, கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதை அறிந்து, அவருக்குக் கீழ்ப்படிந்தால், நமது ஜெபங்களைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிப்பதாக அவருடைய வாக்குத்தத்தம் நமக்கு உண்டு. என்றாலும், நாம் கேட்கும் அனைத்தும் அவருடைய சித்தத்திற்கு ஏற்றவைகளாகவே இருக்க வேண்டும் [Iயோவான்.5:14,15]. ✶

பெண்கள் பகுதி

# சபையை விசாரிப்பது என் கடமை




Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு ஸ்தோத்திரம். இம்மாதமும் நாம் ஒன்றாகச் சேர்ந்து தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கு அவர் கொடுத்த சிலாக்கியத்திற்காக நன்றி செலுத்துகிறேன். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்று [அப். 2:47]-ல் வாசிக்கிறோம். தேவனுடைய அநந்த ஞானத்திலே தோன்றிய சபையானது தேவன் வாக்குரைத்தபடி குறித்த நேரத்திலே குறிப்பிட்ட இடத்திலே ஸ்தாபிக்கப்பட்டது. சபையைப் பற்றியதான தீர்க்கதரிசனங்கள் ஏராளமாக உள்ளன. அத்தத் தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதல்கள் தான் அப்.2ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்ததும் சபையை ஸ்தாபிக்கத்தான், மரித்ததும் சபைக்காகத்தான், உயிர்த்தெழுந்ததும் சபைக்காகத்தான், மீண்டும் வரப்போவதும் சபைக்காகத்தான். மத்தேயு 16:18-ல் இயேசு இந்தக் கல்லியின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று கூறிய வார்த்தையின்படி அநேகராகிய நாம் கிறிஸ்துவின் சபையிலே அங்கமாக இருக்கிறோம். பெண்களாகிய நாம் சபையில் ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. அப்பணிகளை நம்முடையதாக்கிக் கொள்ளவேண்டும். அதில் விசாரிப்பது என்ற பணியை நாம் எவ்வாறு ஆற்ற வேண்டும் என்பதை இம்மாதம் காண்போம்.

விசாரித்தல் என்றால் என்ன? ஒருவரை விசாரிப்பது என்பதற்கு முதலாவது அவர்மேல் நமக்கு அன்பு வேண்டும். **அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்** என்று I பேதுரு 5:7- ல் நாம் வாசிக்கிறோம். வேதாகமத்தில் பந்தி விசாரிப்புக்காரர் என்ற வார்த்தையையும் பல இடங்களில் நாம் வாசிக்கிறோம். இவர்களுடைய வேலையே விசாரித்துக் கேட்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல், சம்மந்தப்பட்டவர்களுக்கு என்ன வேண்டுமோ அதைக் கொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்துவதுதான்

நமதாண்டவராகிய இயேசு பூமியிலே ஊழியம் செய்த நாட்களிலும், இப்போதும் நம் குறைகளை விசாரிக்கிறவராக மாத்திரமல்ல நம் குறைகளை நீக்கி, தேவைகளைக் கொடுத்து ஆற்றி, தேற்றி, சமாதானப்படுத்தி இப்படி எத்தனை, எத்தனையோ நன்மைகளை அள்ளி அள்ளி வழங்கிக்

கொண்டிருக்கிறார். எனவே, விசாரிப்பது வெறும் வாயளவில் நின்றுவிடாமல் செயல் வடிவில் காட்டப்பட வேண்டும். இனி நம் தலைப்பிற்கு வருவோம்.

சரி, ஏன் நாம் சபையை விசாரிக்க வேண்டும்? அதுவும் என் கடமை என்று ஏன் சொல்ல வேண்டும்? நிறைய விளக்கங்களை இது உள்ளடக்கியிருந்தாலும் சிலவற்றை நாம் பார்க்கலாம். கடமை என்றாலே கட்டாயம் செய்து முடிக்க வேண்டிய ஒன்று. கடமை தவறுதல் குற்றமாகும்.

விசாரிப்பதற்கு முன்பாக நாம் மனதில் கொள்ளவேண்டிய காரியங்கள் சில உண்டு. நாம் கூடிவருகின்ற சபையில் எல்லா உறுப்பினர்களும் நாமும் மற்ற ஒவ்வொருவரும் முக்கிய மானவர்கள்என்ற எண்ணம் வேண்டும். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள்; ஏழைகள், பணக்காரர்; மொழி இப்படி எந்த வேறு பாடும் பார்க்காமல் அனைவரும் ஒரே இரத்தத்தினால் கழுவப் பட்டவர்கள் என்ற சிந்தை வேண்டும். சபையானது சரீரம் என்றழைக்கப் படுவதினால் ஒரு சரீரத்தில் உள்ள அனைத்து உறுப்புகளும் மிகவும் முக்கியமானவைகள். அனைத்தம் சமமாக மதிக்கப்படக் கூடியவைகள். எனவே, அந்தக் கண்ணோட்டத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் ( எபே. 4:15,16).

சபையின் அங்கத்தினர்களாக இருக்கும் நானும், நீங்களும் எதையாவது சபைக்கு செய்யவேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும், குழுவாகச் சேர்ந்து செயல்பட வேண்டும். ஆதித் திருச்சபையார் இவ்வாறு செயல்பட்டிருக் கிறார்கள். **விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்கு ள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்ல வில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது** ( அப். 4:32). மேலும், ஐக்கிய உணர்வு அவசியம், சபையின் மூப்பர்களின் தேவையறிந்து அவர்களுக்கு உதவி செய்யலாம், ஞாயிறு பள்ளி நடத்துவதில் ஆர்வம் கொண்டு அதற்கான பாடங்கள் தயாரித்து அவர்களுக்கு வேத அறிவைப் புகட்டலாம், அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பப் பின்னணி இவைகளை விசாரித்து அதற்கேற்ப உதவிகளை எப்படிச் செய்யலாம் என்று யோசித்து, ஏதாவது ஒரு வகையில் அவர்களுக்கு உதவி செய்யும் பொழுது, அவர்கள் எதிர் காலத்தில் நல்ல கிறிஸ்தவர்களாக வளர்ந்து சபைக்குத் தூணும், ஆதாரமுமாக இருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இன்றைய கால

கட்டத்திற்கு இது மிகவும் அவசியம். வாலிபப் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதில் என் பங்கு என்ன என யோசித்து ஆற்ற வேண்டிய பணியை ஆற்றலாம். சுவிசேஷக் கூட்டங்கள் சபையில் நடக்கும்போது கண்டும் காணாமல் இராமல் ஊழியரிடம் விசாரித்து என்னென்ன காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று ஒரு பட்டியல் போட்டு அதற்கான பொருளுதவி, வேலைகள் செய்து, அநேகரை பங்குப் பெறச் செய்ய அவர்களிடத்தில் போய் அவர்களை அழைத்து வருதல் போன்ற இவைகள் எல்லாமே நாம் சபையை விசாரித்தல் என்ற பொருளில் அடங்கும்.

சபைக்கான எந்த வேலையாயினும் அவர்கள் செய்யட்டும் என இல்லாமல் **நாம், நான்** என்ற எண்ணத்துடன் செயல்பாடு இருக்க வேண்டும். பிறர் எனக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் இருந்தால் நம்மால் நம் சபைக்கு எந்த நன்மையும் கிடைக்காது. நாமும் ஆர்வமாகப் பங்குபெற்று, பிறரையும் நம்மோடு அழைத்துக்கொண்டு வேகமாக, பாதியில் நிற்காமல் ஆவிக்குரிய பயணத்தை தொடர்ந்து கொண்டே இருக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் தாலந்துகளை நாம் அடக்கி வைக்கக் கூடாது.

முதலாவது ஆராதனை, வேதபாட வகுப்புக் காரியங்களில் தவறாமல் கலந்து நாம் கொள்கிறோமா? [எபி.10:25; யாக். 4:17] என்று கேட்டுக்கொள்ள வேண்டும். **என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவினிலே இருக்கிறேன் என்றார் இயேசு (மத்.18:20).** சபையாகக் கூடிவரும்போது இயேசு நம்மோடிருக்கிறார், சபையின் மூலமாக உற்சாகம் தூண்டப்படுகிறது, அறிவு விருத்தியடைகிறது, ஆவிக்குரிய முதிர்ச்சி கிடைக்கிறது, விசுவாசம் பலப்படுகிறது, அன்பு பெருகுகிறது, நம்பிக்கை வளர்கிறது. இவ்வளவு ஆசீர் வாதங்களையும் பெறும் நாம் சபைக்குக் கொடுப்பதில் எவ்வளவு ஆர்வமும், உதாரத்துவமுமாய் இருக்க வேண்டும் மேலும், சபையில் உள்ள தேவைகளைப் பார்க்க வேண்டும். மாறாக, சுயநல வாதிகளாக இருக்கக் கூடாது. சபையாகச் சேர்ந்து முதியவர்கள், உத்தம விதவைகள், வியாதியஸ்தர்கள் அவசரத் தேவையில் இருப்போர் இவர்களை சந்தித்துப் பேசி, விசாரித்து, எப்படியாவது அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதில் என் பங்கு என்ன என்று சிந்திக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டிலாகட்டும், புதிய ஏற்பாட்டிலாகட்டும் வறுமையிலிருப்பவர்களையும், தேவையிலிருப்பவர்களையும் விசாரிக்க வேண்டும் என்று தான் தேவன் அறிவுறுத்தி யிருக்கிறார். இவைகள் தான் நற்கிரியைகள் என்று இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்திலே வலியுறுத்தியிருக்கிறார் (மத். 5:16). நம்முடைய கிரியைகள் விசுவாசத்துடன் கூடியதாக இருக்க வேண்டும் (யாக்.2:14).

அருமையானவர்களே! சபையை விசாரிப்பது என் கடமை என்று சொல்லிக்கொண்டு, நம்மைக் கறைப்படுத்திக் கொள்ளக் கூடாது. அதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதிலும் பெண்ணாகிய நாம் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் எல்லையை மீறக்கூடாது. வசனத்தின்படி நம் கிரியைகள் இல்லாமல் இருக்குமானால் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியுள்ளவர்களாக நாம் இருக்க முடியாது. தேவன் இதை விரும்புகிறார், வசனம் இப்படித்தான் செய்யச் சொல்லுகிறது என்று வரும்போது அதை நம் முழு பலத்தோடும் செய்து முடித்து விட வேண்டும். தேவன் அதைத்தான் விரும்புவார்.

எனவே, சபைக்காக நாம் விசாரித்துச் செய்ய வேண்டியதும், நம் பங்கை அறிந்து காரியமாற்றுவதும் குறித்து சில காரியங்களைப் பார்த்தோம். இவைகளைக் கைக்கொள்ள முயற்ச்சிப்போம்! தேவன் உதவி செய்வாராக!! ஆமென்!!!

## ஒரு பிரசங்கியாருக்கு அவசியமானவைகள்

**ஒட்டகத்தைப் போல் சகிப்புத்தன்மை**

**ஆட்டுக்குட்டியைப் போல் மென்மை**

**புறாவைப் போல் கபடற்ற தன்மை**

**சிங்கத்தைப் போல் துணிச்சல்**

**கழுகைப் போல் பார்வை**

**எருதைப் போல் பலம்**

வாலிபர் பகுதி

# ஆவியின் கனியாகிய சந்தோஷம்

Dr. ஏபில் நாயகம்

இரட்சகராகிய இயேசுவின் இன்ப நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். கடந்த மாதத்தில் ஆவியின் கிரியைகளை நாம் எப்படி வெளிப்படுத்த வேண்டுமென்றும் ஆவியின் கனிகளில் பிரதானமான அன்பு பற்றியும் நாம் தியானித்தோம். நாம் மாம்ச இச்சைகளின்படி நடவாமல் ஆவியிலே நடக்கிறவர்களாயிருந்தால் ஆவியின் கனிகளை நாமும் நம் வாழ்வில் பிரதிபலிக்க முடியும். [யோவான் 5:24,25].

ஆவியின் கனிகளில், அன்புக்கு அடுத்ததாக வருவது **சந்தோஷம்** ஆகும். பரிசுத்த ஆவிக்கும் சந்தோஷத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து சில வசனங்களைக் கவனிக்கலாம். ரோமர் 14:17–ல் தேவனுடைய ராஜ்ஜியம்... பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது என்றும் 1தெச. 1:6– ல் தெசலோனிக்கேயர்கள் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்றும் வாசிக்கிறோம். எனவே, பரிசுத்த ஆவியினாலே வழி நடத்தப்படுவோமானால் நம் வாழ்வும் சந்தோஷம் நிறைந்ததாக இருக்கும்.

கிரேக்க மொழியில் **காரா** என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதன் பொருள் பெரு மகிழ்ச்சி/சந்தோஷம். புதிய ஏற்பாட்டிலே இந்த வார்த்தை **கிருபையினாலே கிடைத்த மகிழ்ச்சி** என்று பொருள்படுகிறது. தேவனுடைய கிருபையினாலே அவருடைய அன்பை ருசி பார்த்திருக்கிறோம். அந்தக் கிருபை நமக்கு சந்தோஷத்தைத் தர வேண்டும். ஒரு கிறிஸ்தவன் சந்தோஷமாக இல்லை என்று சொன்னால் அவர் பெற்றுக் கொண்ட **கிருபை, அன்பு** ஆகியவை முழுமையாக இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் பொருள்படும். யோவான் 15:11– ல் **உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி** என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். அவர் கொடுக்கும் சந்தோஷம்

சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷமாக இருக்கிறது. அது நம்மை இவ்வுலகப்பாடுகளை சகித்துக்கொள்ள உதவுகிறதாயிருக்கிறது (1பேதுரு 1:6-8). அவர் நமக்குக் கொடுக்கும் சந்தோஷம் தற்காலிகமான ஒன்றல்ல. நாம் ஆவியினாலே நடத்தப்படுகிறவர்களாக இருந்தால் பவுல் பிலி. 4:4 -ல் சொன்னது போல நாமும் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க முடியும்.

ஆக, தேவனும் அவருடைய குமாரராகிய கிறிஸ்துவும் நமக்கு கிருபையின் வாயிலாக சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை, நம் வாழ்வில் சந்தோஷம் இல்லை என்று நாம் சொல்வோமானால் தேவனுடைய கிருபையையும் கிறிஸ்துவின் அன்பையும் சரிவர நாம் உணர்ந்து புரிந்து கொள்ளாமல் இருக்கிறோம்.

நமக்கு இருக்கும் சந்தோஷத்தின் அளவு நம் விசுவாசத்தின் அளவைப் பொருத்துதான் இருக்கிறது. தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் விசுவாசம் இல்லாமல் மெய்யான சந்தோஷத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. ரோமர் 15:3-ல் **தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் உங்களை நிரப்புவராக** என்று வாசிக்கிறோம். தேவன் மீது நாம் விசுவாசமாயிருந்தால் (மத்.6:25-30) நம் சந்தோஷத்தைக் கேள்விக்குறியாக்கும். **உலகக்கவலை/பயம்** போன்றவற்றிலிருந்து நாம் நம்மைக் காத்துக்கொள்ள முடியும். நமக்கு விசுவாசம் வேண்டுமானால் ரோமர் 10:17-ல் வாசிக்கிறது போல அவருடைய வார்த்தைகளை நாம் தினமும் நாட வேண்டும். வேதாகமத்தை தினமும் நாம் வாசிக்கிறோமா?

தேவனால் கொடுக்கப்படும் சந்தோஷம் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் நாம் கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து எத்தியோப்பிய மந்திரி (அப். 8:35-38) தன் ஊருக்கு மகிழ்ச்சியோடே போனான் என்று வாசிக்கிறோம். அதே அதிகாரம் 5,6 -ம் வசனங்களை வாசித்தால் சமாரிய பட்டணத்தில் இருந்தவர்கள் பிலிப்புவால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டு கவனித்தார்கள் என்று வாசிக்கிறோம். வச 8-ல் **அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம்உண்டாயிற்று** என்று வாசிக்கிறோம்.

அப்படியென்றால் வாலிபர்களே! சந்தோஷம் எனக்குக் கிடைக்கவில்லையே என்று நினைக்கும்பொழுது, என் பங்கிலே

தேவனுடைய வார்த்தைகளுக்கு ஒருவேளை கீழ்ப்படியாமல் இருக்கிறோமோ என்ற சந்தேகம் வந்ததுண்டா? மெய்யான சந்தோஷத்தை நாம் பெற்றுக்கொள்ள தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவது மிகவும் அவசியமானது.

வாலிபர்களே, மெய்யான சந்தோஷத்தைத் தேடும் அநேகரை நாம் பார்க்க முடியும். ஆவியினாலே நடத்தப்பட்டு மெய்யான சந்தோஷத்தைக் காண முடியாதவர்கள் மீண்டும் பாவமான சரீர வாழ்க்கைக்குத் தங்கள் மனதைச் செலுத்தி, அதினாலே சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். இன்னும் பலர் மெய்யான சந்தோஷம் என்னவென்று தெரியாமலேயே உலக வாழ்க்கைதான் மெய்யான சந்தோஷம் என்ற தவறான புரிதலோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து உதவுவது நம் கடமையாகும்.

ஒருவேளை இதை வாசிக்கிற நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவராக இருந்தும் மெய்யான சந்தோஷம் இல்லாதவராக இருந்தால் உங்கள் **விசுவாச அளவையும் உங்கள் கீழ்ப்படிதலின் அளவையும்** சீர்தூக்கிப் பாருங்கள். நிச்சயம் குறை நம்மிடம் தான் இருக்கும். மெய் சந்தோஷத்தை நீங்கள் பெற்றிருந்தால் அதை அறியாத பலருக்கு அதைப்பற்றி தெரியப்படுத்தி மெய்யான மகிழ்ச்சி பெற்று வாழ உதவி செய்யுங்கள். ஆமென்! ✶

## பொய்

பிசாசு பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் (யோவான் 8:44a)

பிசாசு பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவான் 8:44 b)

பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி. 21:8)

கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்களில் பொய்யும் ஒன்று (நீதி. 6:16 -19).




Dr. பிரெய்ஸி

**ஹாய் குட்டீஸ், எப்படி இருக்கீங்க!**

**நீ**ங்கள் எல்லாரும் கெட்டிக்கார குட்டீஸ் என்று எனக்குத் தெரியும். கடந்த மாதம் நாம் பார்த்தபடி எல்லாவற்றுக்கும் நீங்கள் நன்றி சொல்லுகிறவர்களாய் இருப்பீர்கள் என நம்புகிறேன்.

இம்மாதம் நீங்கள் சிந்திக்கத்தக்க மிக முக்கியமான ஒரு காரியம் குறித்துப் பார்க்கப் போகிறோம். நாம் பார்க்கப் போகும் பாடம் மத்தேயு 25:14–30 வசனங்களில் இடம் பெற்றுள்ளது. அதற்குள்ளாக நாம் செல்லுவதற்கு முன், வேதாகமத்தை நீங்கள் எடுத்து இவ்வேத பகுதியை ஒரு முறை வாசித்து விடுங்கள்.

சரி, நீங்கள் இப்பொழுது வாசித்து முடிந்துள்ளபடியால் அதில் இடம் பெற்றுள்ள சம்பவம் என்ன என்று உங்களுக்குத் தெரியும். வேறொன்றுமல்ல, அது தாலாந்து பற்றியது தான்.

நீங்கள் உன்னிப்பாகக் கவனித்தால், முக்கியமான சிலவற்றை இங்கே புரிந்து கொள்ள முடியும். இந்த உவமையில் ஒரு எஜமான் தூர தேசத்துக்குப் போகிறார். அப்படிச் செல்லும் போது, அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக தாலந்துகளைக் கொடுத்துச் சென்றார். போனவர் திரும்பி வருகிறார். அந்த எஜமான் திரும்ப வந்து அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளை அவர்கள் ஒவ்வொருவரும் எப்படிப் பயன்படுத்தினார்கள் என்று வேலைக்காரர்களிடம் உவமையில் கேட்டது போல, **நம்முடைய எஜமானாகிய இயேசு** திரும்ப வரும்போதும் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகள் பற்றி நம்மிடம் கணக்குக் கேட்பார்.

ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாத் தாலந்துகளும் இருக்காது. தேவனுடைய விருப்பப்படி ஒவ்வொரு குழந்தைக்கும் அவரவர் திராணிக்குத்தக்கதாக தாலந்துகள் கொடுக்கப்படும். எப்படி வேலைக்காரர்களுக்கு ஐந்து தாலந்துகள், இரண்டு தாலந்துகள், ஒரு தாலந்து என்று கொடுக்கப்பட்டதோ அது போல.

ஒரு தாலந்து பெற்றவன் அதை மண்ணில் புதைத்து வைத்து வீணாக்கியது போல நம்மிடம் கொடுக்கப்பட்ட தாலந்துகளாகிய திறமைகள் வீணாவதை பரலோக தேவன் ஒருபோதும் விரும்ப மாட்டார். அப்படி வீணடிப்பவர்களில் தேவன்

பிரியப்படவுமாட்டார். அவர்களை ஆசீர்வதிக்கமாட்டார். நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தாலந்தையும் நாம் தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இங்கே ஒரு கனிவான வேண்டுகோள். கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த குழந்தைகளுக்கு என்னென்ன தாலந்துகள் இருக்கிறதென்று கண்டுபிடியுங்கள். அவைகளை தேவன் மகிமைப்படும்படியாய் பெருக்க உதவி செய்யுங்கள்.

பெற்றோர்களே! குழந்தைகள் பெற்றிருக்கும் ஒவ்வொரு தாலந்தும் முக்கியம். ஏனெனில், அவைகள் தேவனால் கொடுக்கப்பட்டவை.

குழந்தைகளே! உங்கள் தாலந்துகள் பாடுவதாக, எழுதுவதாக, ஓவியம் வரைதலாக, வண்ணம் தீட்டுவதாக, மனப்பாடம் செய்வதாக, பிறருக்கு உதவுவதாக என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒவ்வொரு தாலந்தையும் விருத்தியாக்கி தேவ மகிமைக்காகப் பயன்படுத்துங்கள். சரியா?

விடுமுறை நாட்களை வீணாகக் கழிக்காமல் மகிழ்ச்சியாயிருந்து, பயன்படுத்துங்கள்.

---

**உங்கள் மேலுள்ள அன்பில், பிரெய்ஸி அக்கா.**
**செல்: 9566749567**

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க மத். 25 : 14 – 30 )

1. **தன்னுடைய ஊழியக்காரர்களிடத்தில் செல்வத்தை [ஆஸ்திகளைக்] கொடுத்து விட்டு, தூர தேசத்துக்குப் பிரயாணம் போன மனிதன் யாருக்கு ஒப்பாயிருக்கிறார்?**
2. **மூன்று ஊழியக்காரர்களுக்கும் தனித்தனியாக எத்தனை தாலந்துகள் கொடுக்கப்பட்டது?**
3. **ஐந்து தாலந்து பெற்றவன் அதைக்கொண்டு என்ன செய்தான்?**
4. **இரண்டு தாலந்து பெற்றவன் என்ன செய்தான்?**
5. **ஒரு தாலந்து பெற்றவன் என்ன செய்தான்?**
6. **எஜமான் புறதேசத்திலிருந்து திரும்பி வந்த போது யாரை மெச்சிக் கொண்டான்?**
7. **ஒரு தாலந்து பெற்று நிலத்தில் புதைத்து வைத்தவனை எஜமான் என்ன செய்தார்?**
8. **பிரயோஜனமற்ற ஊழியக்காரன் எங்கே போடப்பட்டான்?**

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | |
|---|---|
| பெனிட்டா டென்னி | – காங்கயம் |
| ஹெவன்லின் | – திருப்பத்தூர் |
| கிங்ஸ்லி | – காங்கயம் |
| ஜெபஸ்ரீ | – சென்னை |
| ஜெப பிரியா | – சென்னை |

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு... ***Sis*. லாவின் பென்னி**

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை 'மே' மாத இதழில்)**

## II சாமுவேல் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் 1-10 அதிகாரங்கள்

1) தாவீது யாரை முறியடித்தான்?

2) சவுலின் குமாரன் பெயர் என்ன?

3) தாவீது எந்த மனுஷரிடத்தில் ஆட்களை அனுப்பினான்?

4) யார் இந்த அப்னேர்?

5) இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எங்கே வந்தார்கள்?

6) தேவனுடைய பெட்டியைத் தொட்டதினிமித்தம் அடிபட்டது யார்?

7) தேவனுடைய பெட்டியினிமித்தம் யார் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்

8) சேபாவின் ராஜா பெயர் என்ன?

9) சவுல் ராஜாவினுடைய வேலைக்காரன் பெயர் என்ன?

10) அம்மோன் புத்திரருக்கு உதவி செய்ய யார் பயப்பட்டார்கள்?

## மார்ச் மாத வினாக்களுக்கான விடைகள்

1. ஓப்னி, பினெகாசு (1:3)
2. எல்க்கானா (1:1)
3. கர்த்தருடைய சந்நிதியில் (1:12)
4. சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் (2:26)
5. கர்த்தருடைய ஆலயத்தில் (3:3)
6. சீலோவிலே (3:21)
7. பெலிஸ்தர் (5:1)
8. பாகால்களையும், அஸ்தரோத்தையும் (7:2)
9. சர்வாங்க தகனபலி (7:9)
10. யோவேல், அபியா (8:2)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| G. சாவேல் மோகன்தாஸ் | – | சென்னை |
| N. ஜெபத்தாய் | – | தூத்துக்குடி |
| C. தர்மராஜ் | – | நுள்ளி விளை |
| R. சீகன்பால் | – | காரைக்கால் |
| S. மரியஅந்தோனி | – | திருச்சி |
| S. ஜெயராஜ் | – | கோவை |
| K.S. மாணிக்கவாசகம் | – | ஆனைமலை |
| J.ஜான்ஸி | – | திருச்சி |
| சுபசுரேஷ் | – | K.பாலடா |
| V.S.S. பால்ராஜ் | – | மதுரை |
| Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் | – | கூடலூர் |
| M. செல்வம் | – | கோயமுத்தூர் |
| பாக்கியம் | – | ஈரோடு |
| M.D. ரவிச்சந்திரன் | – | சென்னை |
| V. இந்திரா | – | மணலி, சென்னை |
| V. அபிநயா | – | மணலி, சென்னை |
| Mrs. மேரி ஜெயராஜ் | – | வேளச்சேரி, சென்னை |
| R. ராஜேந்திரன் | – | சிங்காநல்லூர் |
| S.ஜோதிசுரேஷ் | – | திருச்சி |
| P. ராஜேந்திரன் | – | தரங்கம்பாடி |
| D. ஜாய்சிலின் ஜாறு | – | மணலி,சென்னை |
| A. காணிக்கை | – | திருச்சி. |
| N. இந்திரா ஜெபக்கனி | – | தூத்துக்குடி |
| V.C. ரூபவல்யா | – | தூத்துக்குடி |
| A. ஜெயஷீலா | – | காரைக்கால் |
| S. சாந்தகுமாரி | – | நாசரேத் |
| C. அருள்ராஜ் | – | சென்னை |
| சசிக்குமார் | – | மணலி, சென்னை |
| மரியாள் | – | மணலி, சென்னை |
| ராமச்சந்திரன் | – | காங்கயம் |
| இளவரசி | – | காங்கயம் |
| ஷீலா ராணி | – | சிவன்மலை |
| பாலாமணி | – | காங்கயம் |
| செல்வமணி குணசேகரன் | – | சென்னை |
| செல்வி | – | சிவன்மலை |
| ஜமுனா | – | திருப்பூர் |

# கிறிஸ்துவின் பார்வை

*Benny Martin*

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார் என்று நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஆனால், அவர் ஜனங்களை எவ்விதமாகப் பார்த்தார் என்பதை நாம் அதிகமாகப் பார்ப்பதில்லை. **இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி அவர்களைச் சொஸ்தமாக்கினார். அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகி** (மத்தேயு9:35-38). இந்த வசனப்பகுதியில் பரிசுத்த ஆவியானவர் மத்தேயு ஆசிரியர் மூலமாக நம் மனதை உருக்கும் காட்சியை காட்சிப்படுத்துகிறார். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரபரப்பாக ஊழியத்தின் பாதையில் பயணித்த நாட்களிலும் கூட தாம் எதிர் கொண்ட ஜனங்கள் மீது அவர் எப்படிப்பட்ட கண்ணோட்டம் உடையவராக இருந்தார் என்பதை நாம் இவ்வசனப்பகுதியில் வெள்ளோட்டமாக காணமுடியும். கிறிஸ்து ஜனங்களை எப்படியாகப் பார்த்தார் என்பது நாமும் ஜனங்களை எவ்விதமாகப் பார்க்க வேண்டும் என்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாக இருக்கிறது.

**கிறிஸ்து ஜனங்களைக் காயப்படுத்தப்பட்டவர்களாகக் கண்டார்.**

பிரியமானவர்களே! நாம் வாழும் இந்த உலகம் இயந்திரமயமான உலகம். சாலையில் ஒருவர் அடிபட்டுக் கிடந்தாலும் தன் வேலையைப் பார்ப்பதற்காக பரபரப்பாகப் பறந்து கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காயப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்கும் மக்கள் விரல்விட்டு எண்ணும் எண்ணிக்கையில்தான் இருக்கின்றனர். இதற்குக் காரணம் நேரமில்லாததா அல்லது ஈரமில்லாததா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. சராசரியாகப் பார்த்தாலும் கூட தற்கால நல்ல சமாரியர்கள் எங்கே

தொலைந்து போய் விட்டார்கள்? நாம் பார்த்துக் கொண்டிருக்கும் மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்தில் உண்மையாகவே அந்த ஜனங்கள் வியாதியஸ்தர்களாக அதாவது காயப்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்களைக் கிறிஸ்து பரிவாகப் பார்த்தார். அந்தப் பார்வையில் ஓராயிரம் அர்த்தங்கள் இருந்தன. வேறுவிதமாகச் சொன்னால் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து மனதுருகினார். ஜனங்களின் நிலை அவரை அதிகமாகப் பாதித்தபடியால் ஒரு நொடியும் தாமதியாமல் நடவடிக்கையில் இறங்கினார். அதாவது, உடனே அவர்களுக்கு உதவி செய்தார். நாமும் இதே விதமான அனுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.நாம் ஜனங் களுடைய மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் பிரச்சனைகளைக் குறித்த உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களுடைய உணர்வுகளைக் குறித்து அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்கள் நமக்கு எதைச் செய்ய வேண்டுமென்று நாம் நினைக்கிறோமோ, நாம் முதலில் அவர்களுக்கு அதைச் செய்ய வேண்டும் (மத்தேயு 7:12).

**கிறிஸ்து அவர்களை நம்பிக்கையற்றவர்களாகக் கண்டார்**

நமதாண்டவர் அந்த ஜனங்களை நம்பிக்கையை இழந்து விட்டு அதைத் தேடுகிறவர்களாகக் கண்டார். அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தார்கள். அவர்களின் இந்த நிலைமை தான் கிறிஸ்துவின் கவனத்தை ஈர்த்தது. எனவே, அவர் அவர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு உதவ விரும்பினார். இன்றும் நம் இரட்சகர் பலவித காரணங்களால் நிராசையாய் ஓசையின்றி தவிக்கும் மக்களுக்கு ஒரு மார்க்க தரிசியாக இருந்து நம்பிக்கையூட்ட ஆயத்தமாயிருக்கிறார். உலகில் பலர் அந்தகாரத்தில் அல்லல்பட்டு விடியலை நோக்கி ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தங்கள் வாழ்வில் ஒரு வழி பிறக்காதா என்று உறக்கமில்லா இரவுகளை கழித்துக் கொண்டிருக் கின்றனர். நமதாணடவர் **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமா யிருக்கிறேன்** என்று சொல்லியிருக்கிறார் (யோவான்14:6). இன்று உலகில் எல்லா நதிகளும் கடலுக்குத்தானே செல்கின்றன; அதேபோல் எல்லோர் காட்டிய வழியும் பரலோகத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது என்னும் தத்துவம் உலகில் உலா விடப்பட்டிருக்கிறது. இது சிலருடைய விழிகளை வியப்பில் ஆழ்த்தினாலும் இதில் துளியளவும் உண்மையில்லை. நம்முடைய எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபட ஒரே வழி

கிறிஸ்துவே! நம்முடைய இரட்சிப்புக்கு ஒரே வழி கிறிஸ்துவே! கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம் என்று சொல்கிற நாம் வழி தப்பித் திரியும் மக்களைக் கண்டறிந்து அவர்களுக்கு கிறிஸ்துவைக் காட்டி அவர்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்கள் மேல் மனதுருக வேண்டும்.

**கிறிஸ்து அவர்களை ஓர் அறுவடையாகக் கண்டார்.**

பிரியமானவர்களே, இவ்வுலகில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சனையோடு போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்பிரச்சினைகளுக்கு நாம் தீர்வைக் காட்டுவது மாத்திரமல்ல அவர்களுடைய வாழ்க்கையில் சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி சமாதானத்தை உண்டுபண்ணவேண்டும். **சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்** (மத்தேயு 5:9). அதிலும் குறிப்பாக உலகம் கொடுக்கும் சமாதானத்தை அல்ல தேவ சமாதானத்தை அவர்கள் உணர நாம் உதவ வேண்டும். நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் நபர்களை கிறிஸ்துவுக்கான அறுவடை யாகக் காண வேண்டும். அறுவடை மிகுதியாயிருக்கிறது. ஆனால், வேலையாட்களோ குறைவாக இருக்கின்றனர். அதிலும் குறிப்பாக இந்த நாட்களில் கிறிஸ்துவுக்காக முழுநேரமாக வேலை செய்வதற்கு இளைய தலைமுறையினர் முன் வருவதே இல்லை. உலகப் பிரகாரமான ஒரு நல்ல வேலையைத் தெரிந்தெடுத்து நன்றாகச் சம்பாதித்து, ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டு, பகுதி நேரமாக ஊழியம் செய்வதற்கே அவர்கள் விரும்புகின்றனர். அப்படியென்றால் ஆத்தும ஆதாய ஆசை எங்கேயிருந்து வரும்?

அருமையானவர்களே! இதுகாறும் நாம் ஜனங்கள் மீது கிறிஸ்துவின் பார்வை எப்படியெல்லாம் இருந்தது என்று பாரத்தோம். கிறிஸ்து ஜனங்களைக் காயப்பட்டிருக்கிறவர்களைக் கண்டார். கிறிஸ்து ஜனங்களை நம்பிக்கையற்றவர்களாகக் கண்டார், கிறிஸ்து ஜனங்களை ஓர் அறுவடையாகக் கண்டார். அப்படியானால் கிறிஸ்துவின் சீடர்களாகிய நமக்கு ஜனங்கள் மீதான பார்வை எப்படி இருக்கிறது? சற்று சிந்தித்துப் பார்த்துச், செயல்படுவோம். தேவன் தாமே நமக்கு உதவிச் செய்வாராக! ஆமென். ✷

# இயேசுவைத் தொழுதுகொள்ளலாமா?

*Bro.E.A. ஆறுமுகம்*

**முகவுரை:**

**தொ**ழுதுகொள்ளுதல் மற்றும் ஆராதித்தல் என்னும் இரண்டு பதங்களையுமே திருமறை பேசுவதால் இதில் ஏதாவது ஒன்றை மட்டும் நாம் வலியுறுத்த முடியாது. தொழுகை என்பது ஒரு பொதுச் சொல்லாகவும், ஆராதனை என்பது ஒரு பொதுச் சொல்லாகவும், ஆராதனை என்பது ஒரு குறிப்புச் சொல்லாகவும் திருமறை பயன்படுத்துகிறது. தொழுகையை எப்பொழுதும் எவ்வித கட்டுப்பாட்டையும் வேதம் விதிக்காமல் தொழுதுகொள்ள அனுமதிக்கிறது. இதன் பொருள் எழுதப்பட்ட திருமறையை மிஞ்சி தொழுதலல்ல ஆராதனை சில கட்டுப்பாட்டை உள்ளடக்கியது. உதாரணமாக, வாரத்தின் முதல் நாள்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதும் காணிக்கை செலுத்தவதும் அவசியம் என்பதை உட்படுத்தியது புதிய ஏற்பாட்டு ஆராதனை. இதே பலியையும் காணிக்கையையும் உட்படுத்தியது பழைய ஏற்பாட்டு ஆராதனை. இவைகள் தேவனுக்குச் செலுத்தும் மகிமையைக் காட்டுகிறது. இந்த தொழுகையும் ஆராதனையும் இயேசுவுக்கு செலுத்தக்கூடாது என்று தங்களுக்குள் வேறுபட்டுள்ள சிலர் போதிக்கின்றனர். அவர்கள்

★ இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர் தான். எனவே அவர் தொழுகைக்குரியவர் அல்ல என்று தனித்துவக் கொள்கைக் காரர்கள் போதிக்கின்றனர்.

★ பிதா குமாரன் பரிசுத்த ஆவி மூவரும் ஒரே நபர்த்துவமுள்ளவர். எனவே தேவனைத் தொழுதுகொள்வதும் கிறிஸ்துவைத் தொழுதுகொள்வதும் ஒன்றே என்கின்றனர் திரித்துவக் கொள்கையினர்.

★ இயேசுவும் [யோவான் 4:24], தேவ தூதர்களும் [மத்தேயு 22:8,9;19:10] தேவனைத் தொழுதுகொள்ளச் சொல்லுவதாலும், தம்மை தொழுதுகொள்ளும்படி இயேசுவோ, தேவனே கட்டளையாக இதைப் போதிக்காதபடியினாலும் இயேசுவைத் தொழுதுகொள்வது தவறு என்று சில சகோதரர்கள் வலியுறுத்துகின்றர்.

★ நாம் ஜெபம் பண்ணும்போது இயேசுவின் நாமத்தில் [அவர் மூலமாக] பிதாவிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு சொன்னார் [யோவான்16:23,24]. எனவே இயேசுவைத் துதிப்பது போல் தோன்றுகிற எந்தப் பாடலும் இயேசுவை நோக்கியிராத படி கவனித்துக் கொள்ளுதல் அவசியம் என்று சொல்லி போதிக்கின்றனர்.

★ இயேசு கிறிஸ்து தேவத்துவத்தில் ஒருவர் என்பதிலோ அவர் குமாரனாகிய தேவன் என்பதிலோ எவ்வித மாற்றுக் கருத்துமில்லை. ஆனால் தொழுகை என்று வரும்போது அது பிதாவாகிய தேவனுக்கு மட்டுமே செலுத்தப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவை தொழுது கொள்ளக் கூடாது என்கின்றனர்.

★ இயேசுவையும் கனப்படுத்தும்படி செய்யப்பட்ட **பணிந்து கொள்ளுதல், சேவித்தல், பாதத்தில் விழுதல், கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல்** ஆகிய சொற்றொடர் களெல்லாம் தொழுகையுடன் சம்மந்தப்பட்டதல்ல என்று மற்றும் சிலர் போதிக்கின்றனர்.

★ ஆராதனை என்னும் வார்த்தை வட மொழிச் சொல்லாகிய சமஸ்கிருத வார்த்தை. எனவே தமிழை நேசிக்கிற யாரும் ஆராதனை என்ற வார்தையைப் பயன்படுத்தக் கூடாது என்று பலவந்தம் பண்ணுகிறவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

**இயேசுவைக் குறித்து திருமறை போதிப்பது என்ன?**

ஆராதனை என்பது குறிப்புச் சொல் என்பதையும் தொழுகை என்பது பொதுச்சொல் என்பதையும் நாம் துவக்கத்திலேயே பார்ப்தோம். இவைகளுக்குப் பணிந்து கொள்ளுதல் எனும் பதமும் **தொழுது கொள்ளுதல்** [Worship] என்று கிரேக்க சொல் அகராதி எண் 2316 விளக்கமளிக்கிறது. இந்த மூன்று வார்த்தைகளுக்கும் வெவ்வேறு வார்த்தை மூலப்பாஷையில் சொல்லப்படவில்லை. மூன்றுமே ப்ரோஸ்குனே [Proskune]என்றும், ஆங்கில மொழிபெயர்ப்புகள் அனைத்திலும் ஒரே வார்த்தையான Worship என்றும் சொல்லுகிறது. அப்படியிருந்தும் தங்களை மேதாவிகளாகக் கட்டிக்கொள்ள மேற்குறித்தவர்கள் குழப்புகின்றனர். தமிழ் திருமறை **தொழுதல், ஆராதித்தல்** ஆகிய இரு வார்த்தைகளையும் பயன்படுத்துகிறது.

**பழைய ஏற்பாட்டில்**

இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் இயேசு என்னும் நாமத்தில் வெளிப்படவில்லை. அவர் **தேவதூதனானவர்** என்னும் நாமத்தில் சில இடங்களில் தோன்றினார். பழைய ஏற்பாட்டிலும் அவர் ஆண்டவர் என்றும் கர்த்தர் என்றும் அழைக்கப்பட்டார். அவர் தொழுதுகொள்ளப்பட்டார் என்று சில வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

[தொடர்ச்சி...]

# ஓடுங்கள்

*Bro. K.M.* **பிலிப் -பவானி**

**பொ**துவாக, நடப்பதென்பது மனிதர்களின் இயல்பான செயலாகும். ஆனால், ஓடுவதென்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று, ஓடுவது செயலின் தீவிரத்தைக் காட்டுகிறது. ஒன்றை அடைவதில், பெற்றுக்கொள்வதில் உள்ள ஆசீர்வத்தை வெளிப்படுத்துகிறது. விசுவாசிகளாகிய நமக்கும் தேவன் ஒரு ஓட்டத்தை நியமித்திருக்கிறார். **விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்** என்று [எபி.12:1]-ல் தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

நமது ஓட்டத்தில் தீவிரம் காட்டுமுன், வேதத்தில் ஓடிய ஒரு சிலரின் ஓட்டத்தைக் கவனிப்போம். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞன் தாவீது சேனைக்குள் ஓடினான் [1சாமு.17:22]. அந்த ஓட்டத்தில் தகப்பன் கட்டளையை நிறைவேற்றுவதில் அவனுக்கு இருந்த தீவிரத்தைக் [வேகத்தை] காண முடிகிறது. விசுவாசிகளாகிய நாமும் பரம தகப்பன் வேதத்தின் மூலம் கொடுத்த கற்பனைகளை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டும்படியாய் ஓட வேண்டும். லூக்.15:11-32 -ல் இயேசுவின் உவமையில் ஒரு தகப்பன் ஓட்டத்தைப் பார்க்கிறோம். அதில் இழந்துபோன தன் இளைய மகனை மீண்டும் பெற்றுக் கொள்வதில் தகப்பனுக்கிருந்த தீவிரம் தெரிகிறது. நாமும் நம் வாழ்க்கையில் இழந்துபோன சமாதானத்தை, சந்தோசத்தை பெற்றுக்கொள்வதில் தீவிரம் காட்டவேண்டும். வேதவாசிப்பு ஜெபம், சபைகூடி வருதல், சபை வளர்ச்சி இவற்றில் தீவிரம் காட்டும்படி ஓடுவோம்.

மாற்10:17- 23-ல் வாலிபனும், ஐசுவரியவானுமான ஒருவன் ஓடுகிறான். இவன் தன் கௌரவத்தையும் பாராமல் வீதியிலே ஓடிவந்து இயேசுவுக்கு முன் முழங்கால் படியிட்டான் என்பதில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதில் அவனுக்கிருந்த தீவிரத்தைக் காட்டுகிறது. அவன் சரியானவரிடத்தில் வந்தும், சரியாக வழிகாட்டப்பட்டும், அதற்குக் கீழ்ப்படிய மனமில்லாதிருந்ததால், நித்திய ஜீவன இழந்தவனாக மனதுக்கத்தோடே திரும்பிச் சென்றான். அவனுடைய ஓட்டம் வீணாய்ப் போயிற்று. அருமையானவர்களே! நாம் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருக்கத் [யாக்.1:22] தீர்மானித்தவர்களாய் ஓடுவோம்.

லூக்கா 19:1-10- ல் ஒரு பாவியான மனுஷன் ஓடுகிறான். ஆம், சகேயு இயேசுவைக் காண வேண்டும் என்ற வாஞ்சையோடு ஓடிய ஓட்டம், இயேசுவைக் கண்டதோடு அவரோடு கூடவே நடக்கவும், அவனும் அவன் குடும்பத்தோடும் இரட்சிப்பின் மக்களாய் மாறவும் வாய்ப்பாக அமைந்தது. அன்பான தகப்பனே! தாயே! உங்கள் பிள்ளைகளின் சந்தோசமான எதிர்கால வாழ்க்கைக்காக எத்தனையோ ஓட்டங்கள் ஓடியிருப்பீர்கள். ஆனால், பிள்ளைகளின் பரிசுத்த வாழ்க்கைக்காக ஓடியதுண்டா? இப்பொழுதே ஓடுங்கள், **உங்கள் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருக்கும்** (ஏசாயா 54:13).

மத்.28:1-8-ல் மகதலேனா மரியாளும், மற்றொரு மரியாளும் ஓடினார்கள். ஆம், இயேசு உயிர்த்தெழுந்தார் என்று தங்களுக்குக் கிடைத்த நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவிக்கும்படியாய் சந்தோசத்தோடே ஓடினார்கள். அருமையானவர்களே! நம்முடைய கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையில் நாம் பெற்றுக்கொண்ட நற்செய்தியை (சுவிசேஷத்தை) அறிவிக்கும்படியாய்த் தீவிரம் காட்டுவோம். அதில் நமக்கு மட்டுமல்ல, பரலோகத்திலும் சந்தோசத்தை உண்டாக்குவோம். இன்றே இரட்சண்ய நாள். ஓடுங்கள், ஓடுங்கள்! அப்பொழுது **உலகத்தின் முடிவு பரியந்தம் இயேசு உங்களோடிருப்பார். தேவன், உங்களைப் புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும், மகிமையிலும் சிறந்திருக்கும்படி செய்வார்** (உபா.26:19). ஆமென்.

**ஓட்டம் தொடரும்.....**

## பரமப்பிதா

**பரமப்பிதா** உங்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயம் (லூக்கா 11:13)

**பரமப்பிதா** உங்களுக்கு வேண்டியவைகளை அறிந்திருக்கிறார் (மத்தேயு 6:32)

**பரமப்பிதா** உங்களுக்கு பிழைப்பூட்டுகிறார் (மத்தேயு 6:26)

**பரமப்பிதா** உங்களுக்கு மன்னிப்பார் (மத்தேயு 6:14)

**பரமப்பிதா** நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும் (மத்தேயு 15:13)

# ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?

Bro K. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும் சமாதானமும் உண்டாவதாக! சென்ற இதழில் தேவன் மனிதனைப் பார்த்து, ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? என்று கேட்ட கேள்வியைப் பற்றி கலந்தாலோசித்தோம். இப்போது மனிதன் ஆண்டவரைப் பார்த்து கேட்ட கேள்வியாக அப்.9:5,6 –ல் சவுல் என்ற தேவபக்தியுள்ள வாலிபனுக்கு இயேசு ஆண்டவர் தரிசனமான போது, **ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்** என்று அவன் நடுங்கித் திகைத்துக் கேட்ட கேள்வியைப் பார்க்கலாம். நாம் மண் பாண்டத்தைப் போல் சிருஷ்டிகளாக உள்ளோம். தேவன் நம்மை உண்டாக்கிய குயவனைப் போல சிருஷ்டிகராக இருக்கிறார். இதை அறியாத சிலர் தேவனைப் பற்றிய தவறான கேள்விகளைக் கேட்கத் துணிச்சல் கொள்கிறார்கள். ஆனால் இங்கே, சவுல் நடுங்கித் திகைத்து தேவவல்லமையைப் புரிந்து கொண்டவனாக இந்தக் கேள்வியை முன் வைக்கிறான்.

பொதுவாக, தேவனுடைய சத்தம் அல்லது வார்த்தையைக் கேட்ட அனைவருமே நடுங்கியுள்ளார்கள். சீனாய் மலையின் மீது மோசே தேவனுடைய சத்தத்தைக் கேட்டபோது, பயந்து முகத்தை மூடிக்கொண்டான் என்று வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டில் கொர்நேலியு தரிசனம் கண்டபோது பயந்து உற்றுப்பார்க்கத் துணியாமல் என்று காண்கிறோம். உண்மையில், நாம் ஆராதிக்கும் தேவன் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத் தக்கவருமாய் இருக்கிறார்[யாத்.15:11] வேதம் சொல்கிறது, **என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நான் நோக்கிப் பார்ப்பேன்** [ஏசா66:2]. ஆக, கிறிஸ்துவின் உபதேசத்தில் நடக்கிறவர்கள் அதைத் தெரிந்து கொண்டது, உபதேசிப்பது என்பதையும் தாண்டி, வசனத்துக்கு நடுங்கி கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் எதையாகிலும் இழந்தால் அவன் நூறத்தனையாய்ப் பெறுவான் என்றும், ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராய்

இருப்பார்கள் என்றும் நம் ஆண்டவர் சொல்லியிருக்கிறார் [மத்19:29,30] இதில் முந்தினோர் பிந்தினோர் என்பது, ஒருவர் எந்த அளவுக்கு வசனத்துக்கு நடுங்கிக் கீழ்ப்படிந்து, அவர் சித்தம் செய்கிறார்கள் என்பதையே குறிக்கும். நாம் முந்தினோராய் இருக்க யோசேப்பைப் போல் பாவத்துக்குப் பயந்து விலகுகிறவர்களாய், மோசேயைப் போல் நம் அங்கலாய்ப்பைத் தேவனிடம் ஒப்புவித்து சாந்தமானவர்களாய் நடக்கப் பிரயாசப்பட வேண்டும்.

என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான் என்றார் இயேசு. என் வசனத்தைக் கேட்டு அதின்படி செய்பவனே புத்தியுள்ள மனுஷன் என்றும் வலியுறுத்துகிறார். ஆகவே, எனக்கன்பான விசுவாசியே நாம் வெறுமனே சபை கூடுவதால் மட்டுமே பரலோகம் போய்விட முடியாது. தேவசித்தம் இன்னதென்று வெளிப்படுத்தியுள்ள கிறிஸ்துவின் உபதேசப்படி நடப்பதாலேயே நாம் முந்தினோராய் இருக்க முடியும். கிறிஸ்துவின் மலைப் பிரசங்கத்தில் நாம் கேட்ட, தாழ்மை,அன்பு, பரிசுத்தம்,விட்டுக்கொடுத்தல் மன்னித்தல் போன்ற கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நம் நற்கிரியைகளினால் மற்றவர் நம் தேவனை மகிமைப்படுத்தும் அளவுக்கு நம் நடக்கை இருக்க வேண்டும். தற்போது நாம் ஆண்டவரை சந்திக்க நேர்ந்து, ஆண்டவரே நான் என்ன செய்யச்சித்தமாயிருக்கிறீர் என்று கேட்போமானால் என் கட்டளைகளைக் கைக்கொள் என்றுதான் ஆண்டவர் சொல்கிறார் [யோவான்14:15] ஆதி சபையார் பின்பற்றிய, நாம் இப்போதும் பின்பற்ற வேண்டிய அப்போஸ்தலர் உபதேசமும் அதையே வலியுறுத்துகிறது. 1பேதுரு2:10-13- ல் நம் ஆத்துமாவுக்கு விரோதமாகப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகவும், புறஜாதிகள் முன் நல் நடத்தை உள்ளவர்களாய் இருக்கவும் புத்தி சொல்கிறது.

சபை கூடிவரும் போதெல்லாம் நம் மீது மழையைப் போல் தேவ வார்த்தை பொழிகிறது. அதைப் பெற்று நற்கனி தருவோமானால் தேவனால் ஆசீர்வாதம் பெறுவோம் [எபி.6:7,8] இல்லையெனில் சாபமே மிஞ்சும். ஒருவேளை, நம்மில் யாராவது தவறி இருப்போமானால், அதையே தொடராமல் தாவீதைப் போல் **சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்** என்று ஜெபித்து நம்மை

சரி செய்து கொள்ள வேண்டும் (சங்.51:10-12) மாத்திரமல்ல தொடர்ந்து நாம் சோதனையில் அகப்பட்டு விடமல் இருக்க விழித்திருந்து ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்க வேண்டும். ஆண்டவர் இயேசுவும் கெத்சமெனே தோட்டத்தில் அவருடைய விருப்பத்திற்கு மாறான சூழ்நிலை ஏற்பட்டபோது, ஆகிலும் உம் சித்தப்படியே ஆகக்கடவது என்று ஜெபத்ததை நாம் நினைவில் வைப்போம். சூழ்நிலை நம் அறிவுக்குப் புரியாவிட்டாலும் மரியாளைப்போல், உம்முடைய வார்த்தையின் படியே எனக்கு ஆகக்கடவது (லுக்கா1:38) என்று நம்மை ஒப்புக் கொடுப்போம்.

சவுலுக்குப் பிரதியுத்திரமாக இயேசுவானவர் நீ எழுந்துபோ உனக்கு நியமிக்கப்பட்டது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். இதை வாசிக்கும் விசுவாசியே ஒருவேளை, நீ சபைக்குச் செல்வதை தவற விட்டிருந்தால், எழுந்து சபை கூடுமிடத்துக்கு போ! அங்கே நீ செய்ய வேண்டியது உனக்குச் சொல்லப்படும். தேவன் உன்னை சமாதானமாயிருக்கும்படி தான் சபைக்குள் அழைத்திருக்கிறார். பணம், பொருளை விட தேவ வார்த்தை உன்னதமானது. அது வாரந்தோறும் நமக்கு சபை கூடுதலில் கிடைக்க தேவன் சித்தமாயிருக்கிறார். ஆகவே, எபி.13:21 ன் படி அவர் சித்தம் செய்ய தேவன் உங்களைச் சீர் பொருந்தினவராக மாற்றுவாராக! ஆமென்! ✶

## நாளும், நடப்பும்

- **மே 5ல் நீட் தேர்வு. ஏப்ரல் 15 முதல் ஹால் டிக்கெட் வழங்கப்படும்.**
- **வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பிஎஸ்எல்வி -இ45.**
- **அரசுப்பேருந்துகளில் பார்சல் கொண்டு செல்ல கட்டுப்பாடு**
- **நவீன ஹெலிகாப்டர்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல்**
- **குருப்.1 முதன்மைத்தேர்வு: ரூபாய் 200 தேர்வுக்கட்டணம்** TNPSC **அறிவிப்பு**
- IPL **கிரிக்கெட் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.**